**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| Spl.C.C.No. | 80/2019 | அரசு தரப்பு | அ.சா.54 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | திருமதி.சண்முகபிரியா | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 12th day of February 2021.

முதல் விசாரணை

நான் தற்பொழுது காஞ்சிபுரம் மாவட்டம் காவல் கண்காணிப்பாளராக 2020 ஆம் வருடம் ஜூ லை மாதம் 12 ஆம் தேதி முதல் பணியாற்றி வருகிறேன். கடந்த 2011 ஆம் வருடம் நான் கோயமுத்தூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றியபோது எதிரி திரு.பழனிசாமி அவர்கள் தமிழ்நாடு அரசு ஊரகம் மற்றும் கால்நடை துறை அமைச்சராக பணிபுரிந்து வந்தபோது அவர் பொது ஊழியர் என்ற அடிப்படையில் 13.5.2006 முதல் 31.03.2010 ஆம் தேதி வரையான காலங்களில் அவர் தனது வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளார் என கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் பூர்வாங்க விசாரணை மேற்கொண்டேன். பூர்வாங்க விசாரணையில் முதல் தோற்றவழக்கு இருந்ததால் (Prima facie) இருந்ததால், அதன் அடிப்படையில் நான் முறையான வழக்கு பதிவு செய்ய பரிந்துரைத்து கடிதம் எழுதினேன். அந்த கடிதத்தின் அடிப்படையில் எங்களது இயக்குனர் அலுவலகத்திலிருந்து வழக்கு பதிவு செய்ய வேண்டி கடிதம் வரப் பெற்றது. அதன் அடிப்படையில் 28.11.2011 ஆம் தேதி அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.12/2011 / AC/CB ஊழல் தடுப்புச் சட்டம், சட்டப் பிரிவுகள்

13(2) உ/இ 13(1)(e)ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை Ex.P.108 ஆகும். அந்த முதல்தகவல் அறிக்கையின் அசலை சிறப்பு நீதிமன்றத்திற்கும், அதன் நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். வழக்கு சம்மந்தமாக புலன் விசாரணை மேற்கொள்வதற்கும், வங்கி ஆவணங்களை பார்வையிடுவதற்கும் ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 17-ன்படியும், பிரிவு 18 ன்படியும் எனது உயர் அதிகாரியான மேற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அங்கீகாரக் கடிதம் (Authorisation letter) வழங்கினார். அந்த அங்கீகாரக் கடிதம் Ex.P.109 மற்றும் Ex.P.110 ஆகும். புலன் விசாரணையின் தொடர்ச்சியாக எனக்கு கிடைக்கப் பெற்ற தகவலின்பேரில் 7 இடங்களில் சோதனை மேற்கொள்ளவேண்டி கு.வி.மு.ச.பிரிவு 165(5)-ன்படி நீதிமன்றத்திற்கு முன் அறிவிப்பு கடிதம் அனுப்பி வைத்தேன். அந்த கடிதம் Ex.P.111 ஆகும். 7 இடங்களில் சோதனை மேற்கொள்ளப்படவேண்டியுள்ளதால் நான் எனது உயர் அதிகாரிகளிடம் புலன் விசாரணைக்கு உதவியாக இருக்கும் பொருட்டு அதிகாரிகளை நியமிக்க கேட்டேன். அதன்படி கீழ்கண்ட அதிகாரிகளை நியமித்து உத்திரவு பிறப்பித்தார்கள். அதன்பேரில் 29.11.2011 அன்று திரு.அம்பிகாபதி, DSP ( V&AC) திருச்சி, திரு.எஸ்.ராமச்சந்திரன், DSP ( V&AC), கிருஷ்ணகிரி, திரு.ஆர்.ரங்கராஜன், DSP ( V&AC), தஞ்சாவூர், திரு.கே.நாச்சியப்பன், DSP ( V&AC), தர்மபுரி, திரு.எஸ்.சந்திரமௌலி, DSP ( V&AC), சேலம், திரு.ஜி.முருகேசன் DSP ( V&AC),ஈரோடு, திரு.கே.அலிபாட்ஷா, DSP ( V&AC), CC-IV, சென்னை ஆகியோர்களுக்கு கு.வி.மு.ச.பிரிவு 165(3) மற்றும் 166(1)-ன்படி தனித்தனியாக அங்கீகாரக் கடிதம் கொடுத்தேன். மேற்சொன்ன அங்கீகாரக் கடிதங்கள் Ex.P.112 வரிசை (எண்ணிக்கை 7) (Ex.P.112 நகல்கள் ஏற்கனவே Ex.P.1,5,8,10,13,16 மற்றும் 19 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது) அதன் அடிப்படையில் திரு.அம்பிகாபதி அவர்கள் தலைமையில் ஒரு குழுவும், அக்குழுவில் திரு.ஆர்.பி.வாசு, கிராம நிர்வாக அலுவலர், சிங்காநல்லூர் கிராமம், திரு.ஆர்.மாணிக்கம், இளநிலை ஆய்வாளர், பட்டுவளர்ச்சி துறை ஆகிய இரு நபர்கள் சாட்சிகளாகவும் கோயமுத்தூர் சிங்காநல்லூர் நாராயணா

அவின்யூவில், கிருஷ்ணா காலனியில் உள்ள கதவு எண்.1 ஏ 1 என்ற திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களுக்கு சொந்தமான கலைஞர் இல்லம் என்ற வீட்டை சோதனை செய்ய அனுப்பி வைத்தேன்.

திரு.எஸ்.ராமச்சந்திரன், DSP ( V&AC),கிருஷ்ணகிரி அவர்கள் தலைமையில், திரு.டி.பழனிகுமார், வேளாண்மை அலுவலர், திருமதி.ஆர்.ராஜாமணி, வருவாய் ஆய்வாளர் ஆகியோர்கள் சாட்சிகளாக, கோயமுத்தூர் சிங்காநல்லூர், திருச்சி ரோடு, கிருஷ்ணா காலனி, கதவு எண்.1996/A -ல் அமைந்துள்ள விஜயா மினரல்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தையும், மேற்கண்ட முகவரியில் பதிவு அலுவலகத்தைக் கொண்டிருக்கிற மேரீஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட், நீலகிரிஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட், விஜயலட்சுமி பழனிசாமி பொது அறக்கட்டளை ஆகியவற்றை சோதனை செய்ய நியமித்தேன்.

திரு.ஆர்.ரங்கராஜன், DSP ( V&AC), தஞ்சாவூர் அவர்கள் தலைமையில் சாட்சிகள் திரு.எஸ்.சிவக்குமார், உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், சிங்காநல்லூர், திரு.பாலசுப்பிரமணியம், வருவாய் ஆய்வாளர், கருமத்தம்பட்டி பிர்கா ஆகியோர்கள் அரசு சாட்சிகளாக இருந்து, திரு.எம்.சிவா, பழைய எண்.19, புதிய எண்.9, போஸ்ட் ஆபீஸ் மேற்கு தெரு, வரதராஜபுரம், உப்பிலிபாளையம், கோவை என்பவரது விட்டை சோதனை செய்ய பணித்தேன்.

திரு.கே.நாச்சியப்பன், DSP ( V&AC), தர்மபுரி அவர்கள் தலைமையில் சாட்சிகள் திரு.கே.தியாகு, வேளாண் அலுவலர், கோயமுத்தூர், மற்றும் திருமதி.ஆர்.சோபனா, உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், ஒண்டிப்புதூர், கோயமுத்தூர் ஆகியோர்கள் அரசு சாட்சிகளாக இருந்து திரு.பாலன், கதவு எண்.91A, ஆர்.வி.லே அவுட், ஒண்டிப்புதூர், கோயமுத்தூர் என்பவரது வீட்டை சோதனையிட பணித்தேன்.

திரு.எஸ்.சந்திரமௌலி, DSP ( V&AC), சேலம் அவர்கள் தலைமையில் சாட்சிகள் திரு.முனுசாமி, உதவி தோட்டக் கலை அலுவலர், தோட்டக்கலைத்துறை மதுக்கரை மற்றும் திரு.எம்.அறிவழகன், கிராம நிர்வாக அலுவலர், ஒட்டர்பாளையம் கிராமம், சூலூர்

தாலூக்கா ஆகியோர்களை அரசு சாட்சிகளாக இருந்து, கலைஞர் கருணாநிதி இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலிஜியின் பதிவு அலுவலகமான கண்ணம்பாளையம் கிராமத்தில் சோதனை மேற்கொள்ள பணித்தேன்.

திரு.ஜி.முருகேசன், DSP ( V&AC), ஈரோடு, அவர்கள் தலைமையில் சாட்சிகள் திரு.ஜி.விவேகானந்தன், வருவாய் ஆய்வாளர், தாராபுரம், மற்றும் திரு.கே.பிரகாஷ், கிராம நிர்வாக அலுவலர், நாச்சியாம்பாளையம், தாராபுரம் ஆகியோர்களை அரசு சாட்சிகளாக இருந்து திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் சகோதரர் திரு.பி.அர்ஜுணன் அவர்களது செம்மாண்டம்பாளையம், இரக்கம்பட்டி கிராமம், தாராபுரம் வட்டத்தில் உள்ள பண்ணை வீட்டை சோதனையிட பணித்தேன்.

திரு.கே.அலிபாட்ஷா, DSP ( V&AC), CC-IV, சென்னை அவர்கள் தலைமையில் சாட்சிகள் திரு.எஸ்.ரவி, Scientific Asst, Office of the Chief Engineer, Quality Assurance Research, Highways Department, கிண்டி, சென்னை மற்றும் அதே அலுவலகத்தைச் சேர்ந்த திரு.எஸ்.மோகன், வரைவு அலுவலர், ஆகியோர்களை சாட்சிகளாக இருந்து, திரு.எம்.கார்த்திக், கதவு எண்.21, செந்தூர் இல்லம், வெங்கடேஷ நகர், விருகம்பாக்கம் என்ற வீட்டை சோதனையிட பணித்தேன்.

மேற்கூறிய 7 இடங்களிலும் சோதனை செய்து, திரு. அம்பிகாபதி (PW1) அவர்கள், 43 ஆவணங்களை சோதனையின்போது கைப்பற்றி சோதனை ஜாபிதாவுடன் என்னிடம் ஒப்படைத்தார். அந்த சோதனை ஜாபிதா Ex.P.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. திரு.எஸ்.ராமச்சந்திரன் (PW.4) அவர்கள் சோதனையின் போது கைப்பற்றிய 73 ஆவணங்களை சோதனை ஜாபிதாவுடன் என்னிடம் ஒப்படைத்தார். அந்த சோதனை ஜாபிதா Ex.P.7 வரிசையாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. திரு.ரங்கராஜன் (PW.5) அவர்கள் 2 ஆவணங்களை சோதனையின்போது கைப்பற்றி, சோதனை ஜாபிதாவுடன் என்னிடம் ஒப்படைத்தார். அந்த சோதனை ஜாபிதா Ex.P.9 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. திரு.சந்திரமௌலி (PW10) அவர்கள் சோதனையின்பொழுது 44 ஆவணங்களை கைப்பற்றி சோதனை ஜாபிதாவுடன் அவற்றை

என்னிடம் ஒப்படைத்தார். அந்த சோதனை ஜாபிதா ஏற்கனவே Ex.P.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. திரு.நாச்சியப்பன் (PW.13) அவர்கள் சோதனையின்பொழுது 67 ஆவணங்களைக் கைப்பற்றி அவற்றை சோதனை ஜாபிதாவுடன் என்னிடம் ஒப்படைத்தார். அந்த சோதனை ஜாபிதா Ex.P.14 வரிசையாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. திரு.ஜி.முருகேசன் (PW.16) அவர்கள் சோதனையின்பொழுது 2 ஆவணங்களை கைப்பற்றி அவற்றை சோதனை சோதனை ஜாபிதாவுடன் என்னிடம் ஒப்படைத்தார். அந்த சோதனை ஜாபிதா மற்றும் மகசர் Ex.P.17 மற்றும் 18 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. திரு.கே.அலிபாட்ஷா (PW.19) சோதனையின் பொழுது 33 ஆவணங்களைக் கைப்பற்றி சோதனை ஜாபிதாவுடன் என்னிடம் ஒப்படைத்தார். அந்த சோதனை ஜாபிதா Ex.P.21 ஆகவும், மகசர் Ex.P.20 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

கோயமுத்தூர் ராமநாதபுரம் லட்சுமி விலாஸ் வங்கி கிளையில் பாதுகாப்பு பெட்டக எண்.11 ஐ நான் சோதனையிடவேண்டி 1.12.2011 ஆம் தேதி அன்று வங்கியினுடைய முதுநிலை மேலாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 14.12.2011 ஆம் தேதி அன்று கு.வி.மு.ச.165-ன்படி சிறப்பு நீதிமன்றத்திற்கு முன் தகவல் கொடுத்துவிட்டு, அரசு சாட்சிகளான கே.தியாகு, வேளாண் அலுவலர், மற்றும் ஆர்.சோபனா, உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், லட்சுமி விலாஸ் வங்கியின் நகை மதிப்பீட்டாளர் திரு.வினாயகமூர்த்தி ஆகியோர்களின் முன்னிலையிலும், திரு.பாலன் மற்றும் அவருடைய மனைவி செல்வி ஆகியோர்களின் முன்னிலையில் திரு.பாலன் மற்றும் செல்வி ஆகியோரது பாதுகாப்பு பெட்ட எண்.11 ஐ சோதனை செய்தேன். அந்த சோதனையின்பொழுது அந்த பாதுகாப்பு பெட்டகத்தில் 8 அயிட்டம் தங்க நகைகள் இருந்தன. நான் அவற்றை சோதனை செய்துவிட்டு, மேற்கண்ட சாட்சிகளின் முன்னிலையிலும் வங்கி அதிகாரிகள் முன்னிலையிலும், மேற்கண்ட பாலன் மற்றும் செல்வி அவர்களிடம் ஒப்படைத்து விட்டேன். அந்த சோதனை மகசர் Ex.P.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கோயமுத்தூர், ரயில்வே நிலையம் அருகில் உள்ள

பாரத ஸ்டேட் வங்கியின் மெயின் வங்கிக் கிளையில் திருமதி இந்து முருகேசன், திருமதி வித்யா கோகுல் ஆகியோர்களது பாதுகாப்பு பெட்டக எண்.(Locker)531 ஐ சோதனையிட பாரத ஸ்டேட் வங்கியின் முதன்மை மேலாளர் அவர்களுக்கு 1.12.2011 அன்று வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன்பின்னர் 15.12.2011 ஆம் தேதி அன்று மேற்படி பாதுகாப்பு பெட்டகத்தின் உரிமையாளர்களான திருமதி இந்து முருகேசன் மற்றும் திருமதி வித்தியா கோகுல் ஆகியோர்களின் முன்னிலையில் சாட்சிகள் திரு.ஆர் மாணிக்கம், பட்டு வளர்ச்சி துறை, திரு.ஆர்.வி.வாசு, கிராம நிர்வாக அலுவலர், சிங்காநல்லூர், திரு.ஆர்.நாகராஜன், பாரத ஸ்டேட் வங்கியின் வழக்கறிஞர் முன்னிலையில் மேற்படி பாதுகாப்பு பெட்டகத்தை சோதனையிட்டேன். அதில் எவ்வித பொருட்களும் இல்லை. பின்னர் சோதனையை முடித்து பாதுகாப்பு பெட்டகத்தின் சாவியை திருமதி இந்து முருகேசனிடம் ஒப்படைத்தேன். அதற்காக நான் தயார் செய்த சோதனை மகசர் Ex.P.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் பின்னர் புலன் விசாரணை மேற்கொண்டேன். இவ்வழக்கில் 55 நபர்களை சாட்சிகளாக விசாரித்தேன். 94 ஆவணங்களை சேகரித்தேன். எனது புலன் விசாரணையில் 13.5.2006 முதல் 31.3.2010 வரைக்கான காலத்தை நிர்ணயம் செய்து (Check period ) எனது புலன் விசாரணையை தொடர்ந்தேன். திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களுக்கு அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் விவரங்களையும், அவரது வருமானம், வங்கிக் கணக்கு விவரங்கள், செலவு விவரங்கள் முதலியவைகள் குறித்து அடிப்படை அட்டவணை (Basic Statement) 1 முதல் 4 வரை தயாரித்தேன்.

அடிப்படை அட்டவணை எண்.1 என்பது, எதிரி மற்றும் எதிரியின் குடும்பத்தார்கள் Check Period ன் தொடக்கத்தில் அதாவது 13.5.2006 ஆம் தேதி அன்று கொண்டிருந்த அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் குறித்த விவர அறிக்கையாகும். அதன்படி மொத்தம் 55 இனங்களின் சொத்துக்கள் (Items) மதிப்பு ரூ.1,02,60,705.80 ஆகும்.

அடிப்படை அட்டவணை எண்.2 என்பது, எதிரி மற்றும் எதிரியின் குடும்பத்தார்களின் Check Period ன் இறுதியில் அதாவது 31.3.2010 ஆம் தேதி அன்று

கொண்டிருந்த அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் குறித்த விவர அறிக்கை ஆகும். அதன்படி மொத்தம் 42 இனங்களில் சொத்துக்கள் (Items) மதிப்பு ரூ.1,97,52,873.22 ஆகும்.

அடிப்படை அட்டவணை எண்.3 என்பது, 13.5.2006 முதல் 31.3.2010 வரைக்கான Check Period-ல் எதிரி மற்றும் அவரது குடும்பத்தினரின் வருமானங்கள் குறித்த அறிக்கை ஆகும். அதன்படி 18 இனத்தில் (Items), ரூ.69,78,620/- ஆகும்.

அடிப்படை அட்டவணை எண்.4 என்பது, Check Period-ல் அதாவது 13.5.2006 முதல் 31.3.2010 வரைக்கான காலக் கட்டத்தில் எதிரி மற்றும் எதிரியின் குடும்ப உறுப்பினர்கள் செய்த செலவு பற்றிய விவர அறிக்கை ஆகும். அவைகள் 17 இனங்கள் (Items) ரூ.19,50,839.77 ஆகும்.

மேற்கண்ட அட்டவணைகளின் அடிப்படையில் கணக்கீட்டு அட்டவணை எண்.5,6 மற்றும் 7 தயார் செய்தேன். அட்டவணை எண்.5 என்பது, Check Period ன் இறுதியில் உள்ள சொத்தின் மதிப்பிலிருந்து Check Period ல் ஆரம்பத்தில் உள்ள சொத்தின் மதிப்பை கழித்து வரப்பெறும் சொத்து மதிப்பு ஆகும். (Statement No.2 – Statement No.1 = Statement No.5) அதன்படி எதிரி Check Period ல் சேர்த்துள்ள சொத்து மதிப்பு ரூ.94,92,167.42 ஆகும்.

அடிப்படை அட்டவணை 6 என்பது, Check period ல் எதிரி மற்றும் எதிரியின் குடும்ப உறுப்பினர்களுக்கு வரப் பெற்ற வருமானத்திலிருந்து, அவர்களது செலவை கழித்து வரப்பெறும் மதிப்பாகும். மேற்கண்ட சொத்து மதிப்பே அவர்களது சேமிப்பாகும். (Statement No.3 -Statement No.4 = Statement No.6). அடிப்படை அட்டவணை எண்.6 ன்படி எதிரி மற்றும் எதிரியின் குடும்ப உறுப்பினர்களின் சேமிப்பு ரூ.50,27,780.23 ஆகும்.

அட்டவணை 7 என்பது, Check Period ல் எதிரி மற்றும் எதிரியின் குடும்ப உறுப்பினர்கள் சேர்த்த சொத்லிருந்து அவருடைய சேமிப்பை கழித்து வரப் பெற்ற மதிப்பாகும். அதுவே அவரது வருமானத்திற்கு அதிகமாக சேர்த்த சொத்தின் மதிப்பாகும்.

(Statement No.5 – Statement No.6 = Statement No.7). அட்டவணை எண்.7 ன்படி திரு.பொங்கலூர் பழனிசாமி (எதிரி) மற்றும் அவரது குடும்பத்தாரின் வருமானத்திற்கு அதிகமான சொத்தின் மதிப்பு ரூ.44,64,387.00 ஆகும். வருமானத்திற்கு அதிகமான சொத்தின் மதிப்பு 63.97 சதவிகிதம் ஆகும். அதாவது 64 சதவிகிதம் ஆகும்.

மேற்கண்ட மதிப்பு எதிரியானவருக்கு இறுதி வாய்ப்பு அறிவிப்பு கொடுத்தபின்பு வரப்பெற்ற சொத்து மதிப்பு ஆகும். மேற்படி கணக்கீட்டை கணக்கிடுவதற்கு முன்பாக எனது புலன் விசாரணையில் அட்டவணை 1 -ல் Check Period ல் ஆரம்பத்தில் இருந்த சொத்தின் மதிப்பு ரூ.1,02,60,705.80 ஆகும். அட்டவணை 2-ல் Check Period ன் இறுதியில் இருந்த சொத்தின் மதிப்பு ரூ.1,97,52,873.22 ஆகும். அட்டவணை 3-ல் Check Period ல் எதிரிக்கு இருந்த வருமானம் ரூ.69,78,620.00 ஆகும். அட்டவணை 4-ல் Check Period-ல் எதிரிக்கு இருந்த செலவு ரூ.29,88,104.77 ஆகும். அட்டவணை 5-ல் Check Period-ல் எதிரி சேர்த்த சொத்தின் மதிப்பு ரூ.94,92,167.42 ஆகும். அட்டவணை 6-ல் Check Period ல் எதிரியின் சேமிப்பு ரூ.39,90,515.23 ஆகும். அட்டவணை எண்.1 முதல் 6-னை எதிரியிடம் கொடுத்து மேற்கண்ட சொத்து குறித்த திருப்திகரமான விளக்கத்தை அளிக்குமாறு 7.5.2012 அன்று எழுத்து மூலமாக கொடுத்து கோரினேன். அதற்கான ஒப்புதலையும் எதிரியிடமிருந்து பெற்றேன். மேற்படி அட்டவணை எண்.1 முதல் 6 மற்றும் எதிரியின் ஒப்புதல் ஆகியவைகள் Ex.P.113 ஆகும். (Final opportunity notice) Ex.P.113-ற்கு எதிரி 21-5-2012 அன்று தனது விளக்கத்தை எழுத்து மூலமாக என்னிடம் அளித்தார். அந்த விளக்கத்தோடு சில ஆவணங்களையும் இணைத்து அனுப்பினார். எதிரி அனுப்பிய விளக்கவுரை மற்றும் ஆவணங்கள் Ex.P.114 ஆகும். எதிரி கொடுத்த Ex.P.114 விளக்கவுரை மற்றும் ஆவணங்களை நான் பரிசீலனை செய்தேன். எனது பரிசீலனையில் எதிரியானவர் Indus-ind Bank வங்கியின் காசோலை ரூ.25 லட்சம், காசோலை எண்.463717, தேதி 22.10.2005 ஐ சக்தி பிலிம்ஸ் என்ற நிறுவனத்திற்கு கொடுத்திருந்ததாக சொல்லப்பட்டுள்ளது. அதை நான் பரிசீலனை செய்து பார்த்தபோது Check Period-ல் அந்த தொகை மீண்டும் காசோலை எண்.247185, நாள்

5.10.2007 சிட்டி யூனியன் வங்கி காசோலை மூலம் மேரீஸ் சிமெண்ட் கம்பெனி கணக்கிற்கு திரும்ப வரப் பெற்றுள்ளது. மேரீஸ் சிமெண்ட் கம்பெனியில் எதிரி ஒரு இயக்குனர் ஆவார். எனவே, எதிரி கொடுத்த மேற்கண்ட ரூ.25 லட்சத்திற்கான விளக்கத்தை நான் நிராகரித்தேன்.

எதிரி திரு.பொங்கலூர் பழனிசாமியின் மனைவி திருமதி.பி.விஜயலட்சுமி கோயமுத்தூரில் உள்ள ICICI வங்கியின் காசோலை எண்.144205, நாள் 2.4.2004 -ன்படி சக்தி பிலிம்ஸ்க்கு கொடுத்திருந்ததாகவும், அதற்கான வட்டி ரூ.1,55,520.00 உடன் அசலும் சேர்த்து 2007 ஆம் வருடத்தில் எதிரிக்கு ரூ.21,55,520.00 வரப்பெற்றது என தெரிவித்துள்ளார். மேற்கண்ட கூற்றை நான் பரிசீலனை செய்து பார்த்தேன். எனது பரிசீலனையில் காசேலை எண்.144205 என்பது மேரீஸ் சிமெண்ட்ஸ் கணக்கு எண்.001605001719, ICICI Bank, Coimbatore என்ற கணக்கைச் சேர்ந்ததாகும். திருமதி விஜயலட்சுமி அவர்கள் ICICI வங்கியில் கணக்கு எண்.001601507979 ற்கு கொடுக்கப்பட்ட காசோலை எண்களின் வரிசைகள் 5001 (10 எண்ணிக்கை), 201951 (25 எண்ணிக்கைகள்) மற்றும் 541991 (5 எண்ணிக்கைகள்) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. காசோலை எண்.144205 என்பது திருமதி விஜயலட்சுமி அவர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே திருமதி விஜயலட்சுமி அவர்கள் 144205 ன்படி சக்தி பிலிம்ஸூக்கு ரூ.20 லட்சம் கொடுத்திருந்ததாகச் சொல்வதை நிராகரித்து விட்டேன்.

எதிரியானவர் தன்னுடைய விளக்கத்தில் ரூ.8,07,715.00 ஐ விஜயலட்சுமி பழனிசாமி பொது அறக்கட்டளையிலிருந்து பத்திர பதிவு துறையின் குறைவு முத்திரைக் கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் செலுத்தியதாக கூறியிருந்தார். மேற்படி கூற்றை ஆவணங்களை சரிபார்த்து பரிசீலனை செய்தபோது அது சரியானது என தெரிய வந்ததால் அவற்றை நான் ஏற்றுக் கொண்டேன்.

கோயமுத்தூர் கிருஷ்ணா காலனி கதவு எண்.1A1 ற்கான வீட்டு வரி ரூ.77,260.00 மற்றும் ரூ.25,900.00 ஆகியவற்றை எதிரியின் மாமியார் திருமதி பொன்னம்மாள் அவர்கள், அவரது விவசாய வருமானத்தின் மூலம் செலுத்தியதாக தெரிவித்திருந்தார்.

மேற்படி கூற்றி பரிசீலனை செய்த பொழுது எதிரியின் மாமியார் திருமதி பொன்னம்மாள் வயது முதிர்ந்தவராகவும், விவசாயம் செய்ய முடியாத நிலையிலும் இருப்பது எனக்கு தெரிய வந்தது. மேலும் எதிரி மேற்படி கதவு எண்.1A1 வீட்டிற்கான தண்ணீர் வரி செலுத்தியதை ஒப்புக் கொண்டுள்ளார். ஆதலால் வீட்டுவரி பொறுத்த எதிரியின் விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

Check Period ற்கு பிறகு ரூ.2,29,550.00 ஐ வருமான வரியாக வருமான வரித்துறைக்கு எதிரி செலுத்தியதாக தெரிவித்துள்ளார். அதை பரிசீலனை செய்தபோது மேற்படி கூற்று சரியானது என தெரிய வந்ததால் அவற்றை நான் ஏற்றுக் கொண்டேன்.

Check Period ல் ரூ.10 லட்சத்தை IES Security and Services Ltd,.Mumbai என்ற நிறுவனத்திற்கு காசோலை எண்.354907 மூலம் முதலீடு (Invest) செய்ததாக தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி ரூ.10 லட்சத்தை M/s விஜயா மினரல் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் சிட்டி யூனியன் வங்கி நடப்பு கணக்கிலிருந்து காசோலை எண்.354907 மூலம் முதலீடு செய்ததாக சொல்லியுள்ளார். அதைப் பற்றி நான் மேலும் புலன் விசாரணை செய்த பொழுது M/s விஜயா மினரல் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனம் 100 சதவிகிதம் ஏற்றுமதி செய்யும் நிறுவனமாகும். (100% Export Oriented Unit) மேற்கண்ட நிறுவனத்தின் வங்கி கணக்கு சிட்டி யூனியன் வங்கியில் கணக்கு எண்.18132 ல் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட காசோலை எண்.354907 என்ற ரூ.10 லட்சத்திற்கான காசோலை 1.7.2006 ஆம் தேதி அன்று எடுக்கப்பட்டது உண்மை என தெரிய வந்தது. மேலும் அந்த கணக்கை ஆய்ந்து பார்த்தபொழுது அதன் பண பரிவர்த்தனைகள் மேரீஸ் சிமெண்ட்ஸ் கம்பெனி கணக்கோடு Adjust செய்யப்பட்டு வந்துள்ளது. மேலும் இந்த பரிவர்த்தனைகள் கம்பெனி பதிவாளர் ஆவணங்களிலோ, வருமான வரித்துறை ஆவணங்களிலோ எதுவும் துலங்கவில்லை. ஆதலால் அந்த எதிரி கொடுத்த மேற்கண்ட ரூ.10 லட்சத்திற்கான விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

எதிரி கொடுத்த விளக்கத்திற்கே நான் மேலே சொன்ன அட்டவணை எண்.1 முதல் 7 ஐ தயார் செய்து, வருமானத்திற்கு அதிகமாக எதிரி சேர்த்துள்ள சொத்து

ரூ.44,64,387.19 என இறுதி செய்தேன். அதன்பிறகு 31.5.2012 அன்று நான் பணி மாறுதலாகி சென்னைக்குச் சென்று விட்டேன்.

நான் பணிமாறுதலாகி சென்னை சென்ற பிறகும் கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் முழு கூடுதல் பொறுப்பு என்னிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனவே மேற்கு சரக காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள் ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 17 மற்றும் 18 ன்படி 7.6.2012 அன்று அங்கீகார கடிதங்கள் அளித்தார். அது Ex.P.115 மற்றும் Ex.P.116 ஆகும். பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி திரு.பொங்கலூர் பழனிசாமியின் மீது ஊழல் தடுப்பு சட்டம் 13(2) உ/இ 13(1)(e) ன்கீழ் 15.6.2012 அன்று குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன். குற்ற அறிக்கையுடன் அட்டவணை எண்.1 முதல் 7 ஐ இணைத்து தாக்கல் செய்தேன். அது Ex.P.117 ஆகும். எதிரியின் விளக்கத்திற்கு பிறகு தயாரிக்கப்பட்ட கணக்கீட்டு பட்டியல்கள் அட்டவணை எண்.1 முதல் 7 ஆகும்.

( எதிரி தரப்பு வழக்குரைஞரின் வேண்டுதலிக்கிணங்க குறுக்கு விசாரணை 26-02-2021 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

ஒம்/சண்முகபிரியா